70—

சுற்றுலாத் தலம்

***7634—திரு. கே.சி. கருப்பணன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி பவானி, சங்கமேஸ்வரர் கோயிலுக்குப் பல்வேறு மாநில மக்கள் வருவதால், இத்தலத்தைச் சுற்றுலாத் தலமாக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்நிதியாண்டிலேயே எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம் மற்றும் நகரில் உள்ள அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயிலை 'சுற்றுலாத் தலமாக்கும்' கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.சி. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில் என்பது பக்தியை வெளிப்படுத்தும் இடம் என்பதோடு, சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றும் இடமும்கூட என்பதை நிருபித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிந்தனையில் உதித்த அகில உலகத்தில் எந்த ஒரு அரசியல் தலைவரும் செய்ய முடியாத, குறிப்பாகச் சொல்லப்போனால், இந்தியாவில் எந்த ஒரு மாநில முதலமைச்சரும் செய்யாத ஒரு மாபெரும் சாதனையாக 144 திருக்கோயில்களில் திருக்கோயில் அன்னதானத் திட்டத்தை நடத்தியும், 1008 ஏழை மக்களுக்கு இலவசத் திருமணத்தை நடத்தியும், பவானி அருள்மிகு சங்கமேஸ்வரர் திருகோயிலை 144 அன்னதான கோயில்களில் ஒரு கோயிலாக அறிவித்தும் மற்றும் சுற்றுலாத் துறையின் மூலம் கடந்த ஆண்டு 37 இலட்சம் ஒதுக்கி மராமத்துப் பணிகளைச் செய்ய உத்தரவிட்ட சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது பவானி தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த

நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். அதேபோல், இப்போது இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இத்திருக்கோயிலுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, ஐயப்பன் மலைக்குச் செல்கின்ற அனைத்து பக்தர்களும் அந்தக் கோயிலுக்கு வந்து தரிசித்துச் செல்கிறார்கள். அது காவிரி ஆறும் பவானி ஆறும் இணைகின்ற ஒரு முக்கூடலாகும். இந்தக் கோயிலினுடைய வருமானம் வருடம் ஒன்றுக்கு 50 இலட்சம் ரூபாய் வரையில் இருக்கின்றது. ஆகவே, இந்தத் திருக்கோயிலில் வாகனங்கள் நிறுத்துவதற்கு மிகவும் சிரமமாகவும், வரும் பக்தர்கள் தங்குவதற்கு இடவசதி இல்லாமலும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்தக் கஷ்டத்தைப் போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாநில மற்றும் மைய சுற்றுலாத் துறை மூலம் நிதி ஒதுக்க சிபாரிசு செய்யுமாறு அன்புடன் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி உட்பட 38 இடங்கள் புனிதத் தலங்களாக அறிவிக்கப்பட்டு, அப்புனிதத் தலங்களில் அடிப்படை வசதிகள் உட்பட பல்வேறு வசதிகள் செய்யப்பட வேண்டுமென அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், பவானி கூடுதுறையில் அடிப்படை வசதிகள், கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்திட ரூ.39 இலட்சம் செலவில் உரிய பணிகளை மேற்கொள்ள ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மேற்படி பணிகளை ஈரோடு, பொதுப்பணித் துறை கட்டடக் கோட்டம், செயற் பொறியாளர் அலுவலகம் மூலம் வேலைகள் மேற்கொள்ளப்பட உள்ளன என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 71, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சா.

71—

ஆரம்ப சுகாதார நிலையம்

***3984—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS